



# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

திருவாடானை - 623 407

## ஆண்டு மலர்



## 2023 - 2024











# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
## திருவாடானை - 623 407
### இராமநாதபுரம் மாவட்டம்.

# ஆண்டு மலர்
## (2023-2024)

---

தொலைபேசி – 04561 – 254123
மின்னஞ்சல் முகவரி : gactiruvadanai@rediffmail.com
இணையதள முகவரி www.gactvd.in

# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை - 623 407
# ஆண்டறிக்கை (2023 - 2024)

திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, 13.9.2013 அன்று அன்றைய தமிழக முதல்வர் அவர்களால் காணொளிக் காட்சி வழியாக திருவாடானை அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளிக் கட்டிடத்தில் தொடங்கப்பெற்றது.

இக்கல்லூரியின் புதிய கட்டடம் 2.7.2018 அன்று அன்றைய தமிழக முதல்வர் அவர்களால் காணொளிக் காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டது. இக்கல்லூரியில் பி.ஏ. தமிழ், ஆங்கிலம், பி.காம் ஆங்கிலவழி, தமிழ்வழி, பிஎஸ்.சி.கணிதம், கணினிஅறிவியல், காட்சித் தொடர்பியல் ஆகிய இளநிலை பாடப்பிரிவுகளும் எம்.ஏ தமிழ், எம்.எஸ்.ஸி கணிதம் ஆகிய முதுநிலை பாடப்பிரிவுகளும் கற்பிக்கப் பெற்று வருகின்றன.

இவ்வாண்டில் 199 மாணவ மாணவியர்கள் இன்று (5-4-2024) காலையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் தங்களுக்கான பட்டத்தைப் பெற்றுள்ளனர். தற்போது சிறப்புடன் ஆண்டுவிழா நடைபெற்றுவருகிறது.

## மாணவ மாணவியர்களின் எண்ணிக்கையும் கல்வி உதவித்தொகையும்

2023-224 ஆம் கல்வியாண்டில் இக்கல்லூரியில் மொத்தம் 886 மாணவ மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். இவர்களுக்குத் தமிழக அரசு வழங்கும் கல்வி உதவித்தொகை உரிய முறையில் பெற்று வழங்கப்படுகிறது. இக்கல்வியாண்டில் இரண்டாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டுகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவிகள் பிரிவில் 163 பேருக்கு ரூபாய் 6,12,065 கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு 298 பேருக்கு ரூபாய் 3,87,400 வழங்கப்பட்டுள்ளது. புதிதாக முதலாம் ஆண்டு சேர்ந்த மாணவ மாணவியர்கள் 117 பேருக்கு புதிதாக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இக்கல்லூரியில் **புதுமைப்பெண் திட்டத்தின்** கீழ் 145 மாணவியர்கள் மாதம் 1000 ரூபாய் பயன்பெற்று வருகின்றனர். மேலும் மாணவர்களுக்கான **தமிழ்ப்புதல்வன்** என்ற திட்டமும் தமிழக அரசின் வழிகாட்டல் படி இவ்வாண்டு முதல் செயல்படுத்தப்பட உள்ளது.

## ஆசிரியர்கள் அலுவலர்களின் இடப்பெயர்வும் பணியேற்பும்

இக்கல்லூரியில் முதல்வராகப் பணிபுரிந்த முனைவர் திருமதி.அ.மாதவி என்பார் முதல்நிலை முதல்வராகப் பதவி உயர்வு பெற்று இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து 19.06.2023 அன்று பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரிக்கு முதல்நிலை முதல்வராக பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார்.மானூர் அரசு கலைக் கல்லூரியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்த திரு.ச.மனகாவல பெருமாள் என்பாருக்கு உதவியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டு இக்கல்லூரியில் 02.04.2024 முற்பகல் பணியில் சேர்ந்தார்

## கல்லூரியின் வளர்ச்சிப் பணிகள்

2023-24 ஆம் கல்வியாண்டில் இக்கல்லூரியில் நூல்கள் வாங்க இரண்டுலட்சம் ரூபாய் கல்லூரிக் கல்வித்துறையால் வழங்கப் பெற்றது. பொது நூலகம் மற்றும் துறைகளுக்கு 25000 ரூபாய் ஒதுக்கப்பெற்று அத்தொகைக்கான நூல்கள் வாங்கப்பெற்றுள்ளன.

இவ்வாண்டு புதிதாக பத்து வகுப்பறைகள், மற்றும் இரு ஆய்வகக் கட்டடங்கள் கட்டப்பெற்றுள்ளன. மேலும் கல்லூரியின் பொதுப் பணித்துறை வழியாக செயல்படுத்தப்படும் பழுது பார்ப்புப்பணிகளுக்காக ரூபாய்.3,00000/- அரசால் ஒதுக்கப்பெற்றது. இதற்கான பழுதுபார்ப்பு பணிகள் முடிக்கப்பெற்றுள்ளளன. மேலும் ஒரு லட்ச ரூபாய் அளவில் மின் பழுதுபார்ப்புப் பணிகள் ஒதுக்கப்பெற்றுத் தற்போது அப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் பழைய மாணவர் கழகம் ஆகியவற்றின் நிதி வழியாக இவ்வாண்டு துறைக்கு இருபதாயிரம் ஒதுக்கப்பெற்று அதன் வழியாக ஒலிபெருக்கிகள் மற்றும் மரக்கன்று நடும் இயந்திரங்கள் வாங்கப்பெற்றன. அவை பராமரிப்பில் உள்ளன.

மாணவர்களுக்கு நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பல்வேறு திறன்பயிற்சிகள் பருவந்தோறும் வழங்கப் பெற்று வரப்பெறுகின்றது. இவ்வாண்டு கணினிப் பயிற்சிக் கல்வி ஓராண்டு கால அளவாக உயர்த்தப்பட்டு நடைபெற்று வருகின்றது. மேலும் அழகப்பா பல்கலைக்கழகத்தின் வழியாகத்திறன் பயிற்சிகளும் வழங்கப் பெறுகின்றன.

இக்கல்வியாண்டில் தமிழ்த்துறையின் இளநிலை, முதுநிலை இரண்டாம்ஆண்டு, மற்றும் இளநிலை மூன்றாம் ஆண்டு, வணிகவியல் இரண்டாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு (தமிழ்வழி,ஆங்கிலவழி), ஆங்கிலத் துறையின் மூன்றாம் ஆண்டு, கணினி அறிவியல் துறையின் மூன்றாம் ஆண்டு ஆகிய வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் கல்விச் சுற்றுலா சென்று வந்தனர்.

நம் கல்லூரியில் பணியாற்றி வரும் கணிதத்துறைத் தலைவர் முனைவர் ச. செல்வம் அவர்கள் இணைப்பேராசிரியராகப் பணிஉயர்வு பெற்றுள்ளார். மேலும் நம் கல்லூரியின் ஆங்கிலத்துறைத் தலைவர் முனைவர் ப. மணிமேகலை அவர்களும் ஆங்கிலத்துறைப் பேராசிரியர் திரு ஈ. சுரேஷ் அவர்களும் பணி மேம்பாடு பெற்றுள்ளனர்.

## கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சிகள்

21-6-2024 அன்று சர்வதேச யோகா நாள் கல்லூரியில் கொண்டாடப்பெற்றது. 26-6-2023 அன்று போதைப் பொருள் விழிப்புணர்வுப் பேரணி, மாண்பமை நீதிபதிகள் முன்னிலையில் நடைபெற்றது. **போதை தவிர்** என்ற நம் கல்லூரி மாணவர்கள் தயாரித்த குறும்படம் வெளியிடப்பட்டது. இது இராமநாதபுரம் மாவட்ட காவல்துறை இணைய பக்கத்தில் வெளியிடப்பட்டது. 20-7-2023 அன்று நிதிப் பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. 22-7-2023 அன்று முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான தன்னெழுச்சிப் பயிற்சி முனைவர் கரு. முருகன் அவர்களால் தரப்பெற்றது. இந்நிகழ்ச்சியில் திரு ஆணிமுத்து வெற்றி வேலன் முன்னிலை வகித்தார். 11-8-2023 அன்று போதைப் பொருள் இல்லாத தமிழ் நாடு விழிப்புணர்விற்கான பிரச்சாரம் மாவட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களால் நடத்தப்பெற்றது.

15-8-2023 அன்று கல்லூரி விடுதலை நாள் விழா கொண்டாடப் பெற்றது. 17-8-2023 அன்று குடற்புழு நீக்க மாத்திரை மாணவர்களுக்கு வழங்கப்பெற்றது. 18-8-2023 அன்று மத நல்லிணக்க உறுதி மொழி எடுத்துக்கொள்ளப்பெற்றது. 8-9-22023 அன்று மாணவியர்க்கு சிறு தானிய உணவு தயாரிப்புப் போட்டி நடத்தப்பெற்றது. 15-9-2023 அன்று சமூக நீதி நாள் உறுதி மொழி ஏற்கப்பெற்றது.

10-10-2023 அன்று மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டுதல் கருத்தரங்கு, தேவகோட்டை இந்தியன் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின் சார்பில் நடத்தப்பெற்றது. 11.10.2023 அன்று தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்தான விழிப்புணர்வு ஏற்படுத்த தீயணைப்புத் துறையுடன் இணைந்து தொடர் ஓட்டம் நிகழ்த்தப்பெற்றது. 12-10 2023 அன்று சர்வதேச பெண் குழந்தைகள் தின விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பெற்றது.

18-10-2023 அன்று பேரிடர் மேலாண்மை மற்றும் மீட்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி வட்டாட்சியர் அவர்களால் நடத்தப்பெற்றது, 28-10-2023 முதல் இருநாட்களுக்குத் தொடக்கப்பள்ளிகளை ஆய்வு செய்ய நம் மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பெற்றது. இப்பயிற்சியில் மாணவர்கள் கலந்துகொள்ளத் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் ராஜபாண்டி கடமையாற்றினார். 18-10-2023 அன்று பேரிடர் மேலாண்மை மற்றும் மீட்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி வட்டாட்சியர் அவர்களால் நடத்தப்பெற்றது, 31-10-2023 லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழி மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் எடுக்கப்பெற்றது. 9-11-2023 அன்று எரிவாயு பயன்பாடு, தீத்தடுப்பு சிறப்புப் பயிற்சிகள் திருவாடானை லெட்சுமி எரிவாயு நிறுவனத்தாரால் நடத்தப்பெற்றது. 8-12-2023 அன்று ரூசா அமைப்பும் , திருவாடானை அரசு கலைக் கல்லூரியும் இணைந்து இணைய வழியில் மாணவர்களுக்கு மனநலம் சார்ந்த கருத்தரங்கு நடைபெற்றது. 11-12-2023 செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சென்னை, அரசு கலைக்கல்லூரி திருவாடானை ஆகிய இணைந்து நடத்தும் பாரதியார் பிறந்த நாள் விழா பேச்சுப் போட்டி நடத்தப் பெற்றது.

நான் முதல்வன் அமைப்பின் வழியாக 4-1-2024 அன்று பள்ளி மாணவர்களுக்கான உயர்கல்வி ஆர்வ மூட்டல் குறித்தான நிகழ்வு நடத்தப்பெற்றது. 12-1-2024 அன்று சமத்துவப் பொங்கல் விழா கொண்டாடப் பெற்றது. 24-1-2024 அன்று என் ஓட்டு என் உரிமை என்ற மையப்பொருளை முன்வைத்துப் பேரணி நடத்தப்பட்டது. இதில் வட்டாட்சியர் திரு கார்த்திகேயன் துணை வட்டாட்சியர் திரு.பாலமுருகன் ஆகியோர் கலந்து கொண்டனர். 25-1-2024 அன்று வாக்காளர் விழிப்புணர்வு பேரணி, நடத்தப்பெற்றது. 26-1-2024 அன்று கல்லூரியில் குடியரசு தினவிழா கொண்டாடப்பெற்றது. 30-1-2024 அன்று தீண்டாமை ஒழிப்பு உறுதி மொழி எடுக்கப்பெற்றது. 2-2- 2024 அன்று கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரம் நடத்திய பண்பாட்டுத்தேர்வு நடத்தப் பெற்றது. அதில் பத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் சிறப்புப் பரிசினைப் பெற்றனர் நமது கல்லூரி புதிய வாக்களர்கள் சேர்க்கும் மையமாகச் செயல்பட்டு பல புதிய வாக்காளர்களைச் சேர்த்துள்ளது. . 9-2-2024 அன்று கொத்தடிமைத் தொழிலாளர்கள் மறுப்பு உறுதிமொழி எடுக்கப்பெற்றது. 9-2-2024 அன்று தேசிய வாக்காளர் தின உறுதி மொழி எடுக்கப்பெற்றது. இதே நாளில் இராமநாதபுரத்தில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் நமது மாணவர்கள் பங்கேற்றனர்.

29-2-2024 அன்று ஓட்டளிப்பு உறுதி மொழி எடுக்கப்பெற்றது. இதே நாள் வணிகவியல் துறை, மற்றும் ஆங்கிலத் துறையில் கருத்தரங்கம் நடைபெற்றது. 7-3-2024 அன்று இரத்ததான முகாம் இளையோர் செஞ்சிலுவைச் சங்கம், மற்றும் ரெட் ரிப்பின் கிளப் ஆகியவற்றுடன் நாட்டு நலப்பணித்திட்டமும் இணைந்து செயல்படுத்தப்பெற்றது.

15-3- 2024 அன்று சிவகங்கை வேலை வாய்ப்பு அலுவலகத்தின் சார்பில் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு வழி காட்டிப் பயிற்சியும், வேலை வாய்ப்பு பெற வைக்கும் நூல்களும் வழங்கப்பெற்றன. நமது கல்லூரியும், திருவாடானை வட்டார தேர்தல் பணிக்குழுவும் இணைந்து அனைவரும் வாக்களிப்போம் என்ற இலக்கினை நோக்கி மரத்தான் போட்டி நடத்தப்பெற்றது.

## நாட்டு நலப்பணித் திட்டம்

1-10 2023 அன்று ஒரு கோடி பனை விதைகள் நடும் திட்டம், கிழக்குக் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள உப்பூரில் செயல்படுத்தப்பட்டது. 16-10- 2023 அன்று மத்திய அரசின் வழிகாட்டல் படி என் மண் என் தேசம் என்ற தலைப்பிலான நிகழ்வு நேரு யுவகேந்திரா அமைப்புடன் இணைந்து செயல்படுத்தப்பெற்றது. 16-2-2024 அன்று நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தப்பெற்றது. கிளியூரில் நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம் 11-3-2024 முதல் 17-3-2024 லரை ஏழு நாட்கள் நடத்தப்பெற்றது. இதன் வழியாக நமது கல்லூரிச் சாலையில் வேகத்தடுப்பு ஏற்படுத்த ஆவன செய்யப் பெற்றது.

## மகளிர் குழு நிகழ்ச்சிகள்

15-9-2023 பதின்பருவ பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களும் தீர்க்கும் முறைகளும் என்ற தலைப்பில் மாணவியர்க்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பெற்றது. 26-9-2023 அன்று தேசிய ஊட்டச் சத்து விழிப்புணர்வு விழா மகளிர் மேம்பாட்டுக் குழு உறுப்பினர்கள் சார்பில் நடத்தப்பெற்றது 8-3-2024 அன்று உலக மகளிர் தின விழா கொண்டாடப்பெற்றது.

## துறை சார் பணிகள்

## ஆங்கிலத் துறை நிகழ்ச்சிகள்

31-8-2023 அன்று ஆங்கிலத் துறை சார்பில் நடைபெற்ற ஆங்கில மன்றத் தொடக்க விழாவில் அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் பேராசிரியர் முனைவர் ஜி .சோமசுந்தரம் கலந்து கொண்டுச் சிறப்பித்தார். 4-3-2024 அன்று ஆங்கிலத்துறையில் ஆங்கில மன்ற நிறைவு விழா நடத்தப்பெற்றது. இதில் தேவகோட்டை ஸ்ரீ சேவுகள் அண்ணாமலை கல்லூரியின் ஆங்கிலத்துறைத் தலைவர் முனைவர் ஏ. எஸ். அருள்சாமி அவர்கள் கலந்து கொண்டார்.

## தமிழ்த்துறை நிகழ்ச்சிகள்

29-2-2024 அன்று தேவகோட்டை ஆனந்த கல்லூரியில் நடைபெற்ற உலகக் கருத்தரங்கில் தமிழ்த்துறை மணாவர்கள் கலந்து கொண்டனர். தமிழ்த்துறை சார்பில்இளநிலை மாணவர் கருத்தரங்கு மற்றும் 12-3-2024 அன்று முதுநிலை மாணவர்களுக்கான கருத்தரங்கும் நடத்தப்பெற்றன. 27-3-2024 அன்று தமிழ் மன்ற விழா பேராசிரியர் சரசுவதி இராமநாதன் தலைமையில் நிகழ்த்தப்பெற்றது.

## ஆசிரியர் மேம்பாட்டுப் பணிகள்

உயர்கல்வி குறித்தான மாவட்ட ஆட்சியர் கூட்டத்தில் பேராசிரியர் கோ. அழகுராஜா, பா. ராஜாபாண்டி கலந்து கொண்டனர். 3-7-2023 அன்று மாவட்ட அளவிலான தமிழ் வளர்ச்சித் துறை பேச்சுப் போட்டிக்கு நடுவராக பணியாற்றினார். 12 மற்றும் 13 -8-2023 ஆகிய இருநாள்களில் நமது கல்லூரிப் பேராசிரியர்கள் அழகப்பா பல்கலைக்கழக அளவில் கீழக்கரை சயது ஹமீதா கல்லூரியில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் பங்கேற்று மூன்றாம் பரிசினைப் பெற்றனர். இப்போட்டியில் முனைவர். சரத்குமார் ஆட்ட நாயகன் விருது பெற்றார். 8-1-2024 முதல் 12-1-2024 வரை நமது பேராசிரியர்கள் முனைவர் சு. தொண்டியம்மாள், முனைவர் சரத்குமார், திரு பாலமுருகன், திருமதி சர்மிளா ஆகியோர் பேராசிரியர் மேம்பாட்டுப் பயிற்சி நிகழ்வில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். 3-2-2024 முதல் 4-2 2024 வரை இராமநாதபுரம் சேதுபதி கல்லூரியில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் கலந்து கொண்டு மூன்றாம் பரிசினைப் பெற்றனர். இப்போட்டியில் தொடர் நாயகன் விருதினை திரு சதீஸ் அவர்களும், ஆட்ட நாயகன் விருதுகளைத் திரு.ஈ. சுரேஷ் அவர்களும், திரு .வீரபாண்டி அவர்களும் பெற்றனர். மேலும் நமது பேராசிரியர்கள் முனைவர் க. சத்யா, திரு. ஈ. சுரேஷ், திருமதி கண்மலர்,

திருமதி சசி, திரு. ராஜேஷ், திரு இராமமூர்த்தி, திருமதி கண்ணகி, முனைவர் ச. செல்வம், போன்றோரும் பேராசிரியர் மேம்பாட்டுப் பயிற்சியில் கலந்து கொண்டனர். கணினிஅறிவியல் துறையில் பணியாற்றி வரும் திரு என். இராமமூர்த்தி, திருமதி எஸ். ஷர்மிளாசெல்வி ஆகியோர் இணைந்து டேடா ஸ்டக்சர்ஸ் மற்றும் கம்யூட்டர் அல்கரிதம்ஸ் என்ற தலைப்பில் கணினித்துறை நூலை இண்டர்நேஷனல் பப்ளிசர்ஸ் வழியாக உருவாக்கி வெளியிட்டுள்ளனர்.

## மாணவர்கள் பெற்ற பரிசுகள்

3-7-2023 அன்று இராமநாதபுர மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை நடத்திய கவிதைப் போட்டியில் முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு பயிலும் திரு. ப. நவீன்குமார் பங்கேற்று முதல் பரிசு பெற்றார். இதே நாளில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் கணினி அறிவியல் துறையில் இரண்டாம் ஆண்டு பயிலும் செல்வி சந்தான லட்சுமி மூன்றாம் பரிசினைப் பெற்றார். 1-8-2023 அன்று மாவட்ட அளவில் நடைபெற்ற அண்ணல் அம்பேத்கார் குறித்த பேச்சுப் போட்டியில் இளங்கலைத் தமிழ் முதலாம் ஆண்டு பயிலும் வை. வித்யா கலந்து கொண்டு மூன்றாம் பரிசினைப் பெற்றார்.

2-8-2023 அன்று கலைஞர் மு .கருணாநிதி பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு செல்வி சந்தான லட்சுமி கலந்து கொண்டு முதல் பரிசினைப் பெற்றார். 28-7-2023 அன்று மாநில அளவில் ந.டைபெற்ற கவிதைப் போட்டியில் திரு. ப. நவீன்குமார் கலந்து கொண்டு முதற்பரிசு பெற்றார். 22-10-2023 அன்று நடைபெற்ற கலைஞர் வசனம் ஒப்புவித்தல் போட்டியில் செல்வி வா.சந்தானலட்சுமி கலந்து கொண்டு முதற்பரிசினைப் பெற்றார். 23-12-2023 ஆம் நாள் முதல் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற ஐந்துநாள் இலக்கிய இளைஞர் பாசறையில் ப. நவீன் குமார், சந்தான லட்சுமி ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

---

## இனிமைத் தமிழ்மொழி எமது

ப. நவீன் குமார் (முதுகலை தமிழ் இரண்டாம் ஆண்டு)

குமரிக் கண்டம் முழுதும் – தவழ்ந்த
தென்றல் இன்றும் மணக்கும்
தமிழன் ஆண்ட உலகில் – பிறந்த
தமிழுக்கு வணக்கம்

வள்ளுவன் மொழிந்த இருவரி
தமிழின் இனிமைக்கு முகவரி!
கம்பன் பிழிந்த கவிதை
தமிழுக்கு அது அட்சதை

கபிலன் வரைந்த ஓலை
தமிழுக்கு பட்டுச்சீலை
பாரதி எழுதிய பாடல்
பாலில் கலந்த தேறல்களவழி

நாற்பது உமை களவாடும்
இளநெஞ்சம் தமிழில் விளையாடும்
மழை நீங்கிய மாவிசும்பும்
எம் தமிழணங்கை விரும்பும்

வள்ளுவனின் குறளமுதைச்
சுவைக்கும் கரையானும் எறும்பும்
மலை என உயர்ந்த ஒரு மொழி எது?
மதுவென இனிக்கும் திருமொழி இது

இனியன நாற்பது எனும் நூலொன்று
தமிழில் மட்டும் இதுவரை உண்டு
சங்கம் வளர்த்த மதுரையில்
எங்கும் வீசுது தமிழ் மணம்

குடித்துத் தீருங்கள்
அமுதின் இனிமையை!
பொங்கும் குமரிக் கடலுள்ளும்
இருக்குது எங்கள் தமிழினம்.

உலகில் மூத்தது தமிழ்மொழி
என் உயிர்வழி ஓடும் உயிர்வளி
இவை இதயம் செய்த முரசொலி
படித்தவை எல்லாம் அதன் எதிரொலி

படித்து பாருங்கள் தமிழின் பெருமையை
தமிழே எங்கும் முதலில் முழங்கும்–என்
தலைமுறையும் இனி
இதையே வழங்கும்!

## தமிழர் பண்பாடு

## மாணவர்களின் கருத்துக் குவியல்கள்

பண்பாடு என்பது பண்படுவது எனலாம். பொதுவாக பண்பாடு என்பது மனிதனின் நடவடிக்கைகளைக் குறிக்கின்றது. நாகரீகத்தையும், பண்பாட்டையும் கற்றுக் கொடுத்த பெருமை தமிழருக்கு உண்டு

– **எஸ் . காயத்திரி** கணினி அறிவியல் மூன்றாம் ஆண்டு.

சங்க காலத் தமிழர்கள் காதலையும், வீரத்தையும் இரு கண்களாகக் கருதினர். இவ்விரண்டையும் அகம், புறம் என இரண்டாகப் பிரித்து, அகத்திணைகள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என அன்பின் ஐந்திணைகளாகவும், புறத்திணைகளை வெட்சி , வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை , வாகை, பாடாண் என பிரித்தும் வாழ்ந்தனர்.

– **வை. அரிணி**, முதுலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு

யாதும் ஊரே, யாவரும் கேளீர் , தீதும் நன்றும் பிறர் தர வாரா என்று பாடிய கணியன் பூங்குன்றனார் உலகிற்கே சமத்துவப் பண்பாட்டைக் கற்றுத் தருகிறார்.

அழுக்காறு, அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்

என்று தமிழரின் பண்பாடு அறம் சார்ந்தது என்று காட்டுகிறார் திருவள்ளுவர்.

– **எ. அனுசுயா**. பி.ஏ. ஆங்கிலம் மூன்றாம் ஆண்டு

உறவினர்களை வரவேற்று உபசரித்தல், இன்சொல் பேசுதல் , உயிர்களிடத்து அன்பு காட்டுதல் போன்ற பல நடைமுறைகள் தமிழர் பண்பாடு ஆகும்.

- **எ. வின்சிலின்** பி.ஏ. ஆங்கிலம் மூன்றாம் ஆண்டு

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

அனிச்சம் பூவானது ஒருமுறை நுகர்ந்து பார்த்தாலே வாடிவிடும். அது போல விருந்தினர்களும் உபசரிப்பவரின் முகம் மாறினாலே வாடிவிடுவர். விருந்தோம்பல் என்பது தமிழர்களின் பண்பாட்டில் மிக் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது என்பதை மேலே காட்டிய திருக்குறள் காட்டுகின்றது.

– **எம். அறிவுமதி**, முதுநிலை அறிவியல், இரண்டாம் ஆண்டு

தமிழ் மொழிக்கு எவ்வளவு புகழ் உள்ளதோ அதே அளவு தமிழரின் பண்பாடும் சிறப்பும் புகழும் கொண்டு நிலைத்து நிற்கிறது.

– **டி. செல்வராணி**, பி.ஏ. ஆங்கில இலக்கியம்

## நுண்கலை மன்றப் போட்டி முடிவுகள்

### பேச்சுப் போட்டி

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | V. சந்தானலெட்சுமி | B.Sc Computer Science | II |
| இரண்டாம் பரிசு | T. பவித்ரா | M.Sc Maths | II |
| மூன்றாம் பரிசு | C. கிருஷ்ண வேணி | BA English | II |

### பாட்டுப் போட்டி

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | S. ஶ்ரீநிதி | B.Com (Tamil) | III |
| இரண்டாம் பரிசு | V கார்த்திகா | BA English | II |
| மூன்றாம் பரிசு | S. வர்ஷினி | BA Tamil | I |

### கட்டுரைப் போட்டி

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | M. அறிவுமதி | M.Sc Maths | II |
| இரண்டாம் பரிசு | M. மஞ்சுளா | B.Com (English) | III |
| மூன்றாம் பரிசு | A. அனுசியா | BA English | III |

### ஓவியப் போட்டி

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | S. சரண்குமார் | M.Sc Maths | II |
| இரண்டாம் பரிசு | B. ஹர்ஷினி | B.Com (English) | III |
| மூன்றாம் பரிசு | A. கஸ்தூரி | BA English | III |

### கோலப் போட்டி

முதல் பரிசு – **B.Com (E/M)**

**M.மஞ்சுளா, B.பகவதி, U.கல்பனா, D.அபிராமி, G.திரிஷா**

இரண்டாம் பரிசு – **B.Sc Maths**

**M.பிரியா, J.அனுஶ்ரீ, R.கிருத்திகா, M.சுரேகா, M.மல்லிகா**

மூன்றாம் பரிசு –

**B.Sc Computer Science**

**N.விக்கினேஷ்வரி, P.திரிஷா, S.காயத்ரி, V.சந்தானலெட்சுமி, M.சுவேதா**

**B.Com (T/M)**

**A.ரக்ஷனா, K.பிரியதர்ஷினி, A.கஸ்தூரி, S.ஶ்ரீநிதி, P.கார்த்திகா**

# விளையாட்டுப் போட்டிகளில்
# பரிசி பெற்ற மாணவ, மாணவியர்களின் பட்டியல்
## ஆண்கள் பிரிவு
### குண்டு எறிதல்

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | R. கண்ணன் | BA Tamil | II |
| இரண்டாம் பரிசு | P. ஹரிகரன் | B.Sc Computer Science | I |
| மூன்றாம் பரிசு | K. மணிகண்டன் | BA Tamil | II |

### ஈட்டி எறிதல்

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | R. அஸ்வின் | B.Com (Tamil) | II |
| இரண்டாம் பரிசு | G. நவீன்குமார் | B.Sc Computer Science | II |
| மூன்றாம் பரிசு | A. ஹரிஸ்பாண்டி | BA Tamil | III |

### வட்டு எறிதல்

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | S. தருண்குமார் | BA English | III |
| இரண்டாம் பரிசு | R. ஹரிகரன் | BA Tamil | II |
| மூன்றாம் பரிசு | நிதீஸ்குமார் | BA Tamil | III |

### 200 மீட்டர் ஓட்டப் பந்தயம்

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | R. கரிப்பிரியன் | BA Tamil | I |
| இரண்டாம் பரிசு | G. நவீன்குமார் | B.Sc Computer Science | II |
| மூன்றாம் பரிசு | R. ரோகன் | B.Com (English) | III |

## உயரம் தாண்டுதல்

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | R. ஜெயசீலன்சிபி | B.Sc Computer Science | II |
| இரண்டாம் பரிசு | M. உதயகுமார் | BA English | II |
| மூன்றாம் பரிசு | K. கண்ணன் | BA Tamil | II |

## நீளம் தாண்டுதல்

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | T. ஹரிஸ் | BA Tamil | II |
| இரண்டாம் பரிசு | A. வசீம்அக்ரம் | B.Com (English) | II |
| மூன்றாம் பரிசு | T. ஆரோக்கிய வில்சன் | BA English | II |

## 400 மீட்டர் ஓட்டப் பந்தயம்

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | R. ரோகன் | B.Com (English) | II |
| இரண்டாம் பரிசு | G. நவீன்குமார் | B.Sc Computer Science | II |
| மூன்றாம் பரிசு | A. வசீம் அக்ரம் | B.Com (English) | II |

## கபடி

| | |
|---|---|
| முதல் பரிசு | ஹரிஸ் அணி |
| இரண்டாம் பரிசு | வைரமணி அணி |
| மூன்றாம் பரிசு | கிஷோர் அணி |

## கிரிக்கெட்

| | |
|---|---|
| முதல் பரிசு | மணி அணி |
| இரண்டாம் பரிசு | ராமமூர்த்தி அணி |
| மூன்றாம் பரிசு | ராமநாதன் அணி |

# பெண்கள் பிரிவு

## ஈட்டி எறிதல்

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | M. ராஜராஜேஸ்வரி | B.Com (English) | II |
| இரண்டாம் பரிசு | M. மீனாட்சி | B.Com (English) | III |
| மூன்றாம் பரிசு | M. பிரியதர்ஷினி | BA Tamil | II |

# பெண்கள் பிரிவு தொடர்ச்சி...

## வட்டு எறிதல்

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | பிரியதர்ஷினி | **BA Tamil** | II |
| இரண்டாம் பரிசு | **M.** மீனாட்சி | **B.Com (English)** | III |
| மூன்றாம் பரிசு | **S.** பானுபிரியா | **BA English** | II |

## குண்டு எறிதல்

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | **M.** பிரியதர்ஷினி | **B.Com (English)** | I |
| இரண்டாம் பரிசு | **M.** பிரியதர்ஷினி | **BA Tamil** | II |
| மூன்றாம் பரிசு | **M.** ராஜராஜேஸ்வரி | **B.Com (English)** | II |

## 100 மீட்டர் ஓட்டப் பந்தயம்

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | **M.** பிரியதர்ஷினி | **BA Tamil** | II |
| இரண்டாம் பரிசு | **V.** வித்யா | **BA Tamil** | I |
| மூன்றாம் பரிசு | **P.** ரசிகா | **B.Sc Computer Science** | I |

## 200 மீட்டர் ஓட்டப் பந்தயம்

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | பிரியதர்ஷினி | **BA Tamil** | II |
| இரண்டாம் பரிசு | முருகேஸ்வரி | **B.Com (Tamil)** | II |
| மூன்றாம் பரிசு | **G.** காயத்ரி | **B.Com (Tamil)** | III |

## உயரம் தாண்டுதல்

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | **G.** சுமதி | **B.Com (English)** | II |
| இரண்டாம் பரிசு | **M.** பிரியதர்ஷினி | **BA Tamil** | II |
| மூன்றாம் பரிசு | **K.** லாவண்யா | **B.Sc Computer Science** | I |

## நீளம் தாண்டுதல்

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | G. லாவண்யா | **B.Sc Computer Science** | **I** |
| இரண்டாம் பரிசு | V. வித்யா | **BA Tamil** | **II** |
| மூன்றாம் பரிசு | G. சுமதி | **B.Com (English)** | **II** |

## 4 X 4 மீட்டர் தொடர் ஓட்டம்

| பரிசு | பெயர் |
|---|---|
| முதல் பரிசு | சாதனா சர்கம், M. பிரியதர்ஷினி, ஜாய் பெட் சல்யா, அம்மு |
| இரண்டாம் பரிசு | G. காயத்ரி, சி.அம்பிகா, சுமதி, துர்கா தேவி, |
| மூன்றாம் பரிசு | A. ரோசகா, அருள் ஸ்டெபி, R. லத்திகா, பிரசிலா |

## 400 மீட்டர் ஓட்டப் பந்தயம்

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | M. பிரியதர்ஷினி | **BA Tamil** | **II** |
| இரண்டாம் பரிசு | P. முருகேஸ்வரி | **B.Com (Tamil)** | **II** |
| மூன்றாம் பரிசு | M. விளங்கேஸ்வரி | **B.Com (Tamil)** | **II** |

## கோ - கோ

| பரிசு | பெயர் |
|---|---|
| முதல் பரிசு | சாதனா அணி |
| இரண்டாம் பரிசு | கிருஷ்ணவேணி அணி |
| மூன்றாம் பரிசு | லாவண்யா அணி |

## கபடி

| பரிசு | பெயர் |
|---|---|
| முதல் பரிசு | ஸ்ரீ நிதி அணி |
| இரண்டாம் பரிசு | ஆனந்தி அணி |
| மூன்றாம் பரிசு | சாதனா அணி |

## பாரா விளையாட்டு (ஆண்கள்)

## குண்டு எறிதல்

| பரிசு | பெயர் | துறை | ஆண்டு |
|---|---|---|---|
| முதல் பரிசு | S.கமலேஷ் | **BA Tamil** | **I** |
| இரண்டாம் பரிசு | A.நிதீஸ்குமார் | **BA Tamil** | **II** |
| மூன்றாம் பரிசு | M.நைனா முகமது சாதிக் | **BA Tamil** | **III** |

**பெண்கள்:-** பெயர்:– B. அபிநயா துறை: – **BA Tamil** ஆண்டு:- **I**

இந்திய மொழிகள் நாள் பேச்சுப்போட்டி



தமிழ் மன்ற விழா



குடியரசு தின விழா



பனைமர விதை நடுதல்



நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம்





தேர்தல் விழிப்புணர்வு சிறப்பு ஓட்டம்






விழிப்புணர்வு பேரணி

வேலைவாய்ப்பு முகாம்






தொண்டி கோல்டன் ரோட்டரி முகாம்

இரத்ததான முகாம்






# Proficiency Prize list-Academic year 2023-2024

| S. No | Name | Dept. | Rank | S. No | Name | Dept. | Rank |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | **B.VAIRA JOTHY** | First yr. B.A. Tamil | I | 22. | **M.JEYATHARANI** | Second yr. B.Com(T.M.) | II |
| 2. | **R.SHARMILA** | First yr. B.A. Tamil | II | 23. | **P.RETHINESWARI** | Second yr. B.Com(E.M.) | I |
| 3. | **K.KANAGADURGA** | Second yr. B.A. Tamil | I | 24. | **R.JENUL NAVITH** | Second yr. B.Com(E.M.) | II |
| 4. | **S.NITHYA SRI** | Second yr. B.A. Tamil | II | 25. | **S.SRINITHI.** | Third yr. B.Com(T.M.) | I |
| 5. | **B.JOY HATCHIYAL** | Third yr.B.A. Tamil | I | 26. | **S.AAKASH** | Third yr. B.Com(T.M.) | II |
| 6. | **M.ARUNADEVI** | Third yr.B.A. Tamil | II | 27. | **A.SIVA** | Third yr. B.Com(E.M.) | I |
| 7. | **M.GONKESWARI** | First yr. M.A. Tamil | I | 28. | **G.THIRISHA** | Third yr. B.Com(E.M.) | II |
| 8. | **T.VANITHA** | First yr. M.A. Tamil | II | 29. | **A.KARTHIKA** | First yr. B.Sc.(Maths) | I |
| 9. | **N.UDHAYA** | Second yr. M.A. Tamil | I | 30. | **M.NANDHINI** | Second yr.B.Sc.(Maths | I |
| 10. | **P.VASANTHAKUMAR** | Second yr. M.A. Tamil | II | 31. | **M.MALLIKA** | Third yr. B.Sc.(Maths) | I |
| 11. | **P.KRISHNAVENI** | First yr. B.A. English | I | 32. | **X.SOFIYA** | Third yr. B.Sc.(Maths) | II |
| 12. | **P.ABINAYA** | Second yr. B.A. English | I | 33. | **R.ABIRAMI** | First yr. M.Sc.(Maths) | I |
| 13. | **M.FEMINA** | Second yr. B.A. English | II | 34. | **T.PAVITHRA** | Second yr. M.Sc.(Maths) | I |
| 14. | **A.ANUSIYA** | Third yr.B.A. English | I | 35. | **K.MUNEES PRIYA** | First yr. B.Sc.(comp.sc) | I |
| 15. | **S.SNEKA** | Third yr.B.A. English | II | 36. | **M.BRINTHA MALAR** | First yr. B.Sc.(comp.sc) | II |
| 16. | **M.PARANITHARAN** | Third yr.B.A. English | II | 37. | **S.MUBINA BEGAM** | Second yr.B.Sc.(comp.sc | I |
| 17. | **K.ARTHI** | First yr. B.com.(T.M.) | I | 38. | **S.GAYATHRI** | Third yr. B.Sc.(Comp.sc) | I |
| 18. | **T.ANITHA** | First yr. B.com.(T.M.) | II | 39. | **P.THIRISHA** | Third yr. B.Sc.(Comp.sc) | II |
| 19. | **R.ARUNITHA** | First yr. B.Com.(E.M.) | I | 40. | **P.AMAL REEGAN** | Second yr B.Sc.(Viscom) | I |
| 20. | **P.SOORIYA** | First yr. B.Com.(E.M.) | II | 41. | **M.ASHA** | Third yr.B.Sc.(Viscom) | I |
| 21. | **K.MAHA SRI** | Second yr. B.Com(T.M.) | I | 42. | **M.PANDI** | Third yr.B.Sc.(Viscom) | II |